www.tamilarangam.net

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

National Liberation Front of Thamileelam

# புரட்சி முகத்திரைகளும் கொலை வெறி பிடித்த முகங்களும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எதிரிகளை மட்டுமன்றி விடுதலைப் போராளிகளையும் இயக்கங்கள் கொன்று வருகிற துயரவரலாற்றில் மேலுமொரு இரத்தக்கறை படிந்த அத்தியாயம் முடிவடைந்து விட்டது.

தோழர் நேரு என்ற ஜெகதீஸ் மிருகத்தனமான முறையில் தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் (TELO) படுகொலை செய்யப்பட்டார், என்பதைத் தமிழீழ மக்களுக்கு அடங்காத துயரத்துடன் தெரிவிக்கிறோம்.

தோழர் நேரு, அவரைத்தெரிந்த எல்லோராலும் நேசிக்கப்பட்டவர்; நீதியையும் மனிதாபிமானத்தையும் தமிழீழத்தில் நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டவர்.

ஆரம்பத்தில், தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் இணைவதற்கான ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். ஜூலை 83 தமிழினப் படுகொலையின் பின்பு தமிழீழமெங்கும் வீசிய 'ஆயுதப்பயிற்சி அலை' யினால் உந்தப்பட்டு தமிழீழ விடுதலை இயக்கத்தில் (TELO) சேர்ந்தாலும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) நடவடிக்கைகளில் அதிருப்தியுற்று வெளியேறிய பலரில் அவரும் ஒருவராக இருந்தார். குறிப்பாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) 'எழுச்சி' பத்திரிகையின் இனவாதக்கண்ணோட்டம், TELO அமைப்பினுள்ளே காணப்பட்ட ஜனநாயக எதிர்ப்பு இயல்புகள், உட்கட்சிப் போராட்டத்திற்கான சாத்தியமின்மை போன்றவை குறித்து தோழர் நேருவின் தீவிர அதிருப்தியே தமிழீழ விடுதலை இயக்கத்தில் (TELO) இருந்து அவரை ஒதுங்க வைத்தது.

அதன் பின்னர்
எங்கள் அமைப்பின் கருத்துக்களுடனும் வேலைத்திட்டத்துடனும் அவருக்கு உடன்பாடு இருந்தது; எமது தோழர்களுடன் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வந்தார். இந்நிலையில் தமிழீழ விடுதலை இயக்கத்திடம் (TELO) இருந்து தனது உயிருக்கு ஆபத்து விளையலாம் என கருதியதில் தனக்குப் பாதுகாப்பு தருமாறு எம்மைக் கேட்டுக் கொண்டார்.

எங்களுடைய அமைப்பில் தோழர் நேரு ஒரு அங்கத்தினராகச் சேர்ந்திராத போதும் கூட, அவருடைய கோரிக்கையின் நியாயம் கருதி அவரை எமது பாதுகாப்பிடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று வைத்திருந்தோம். 10. 10. 84 அன்று தமது பாதுகாப்பிடத்திலிருந்து தேவை கருதி வெளியே போக வந்த தோழர் நேரு தமிழீழ விடுதலை இயக்க (TELO)த்தவர்களால் கடத்தப்பட்டார்.

13. 10. 84 அன்று எமது மத்தியகுழு, தமிழீழ விடுதலை இயக்கத்தின் மத்தியகுழுவிற்கு முக்கியமான சில தமிழீழ விடுதலை இயக்க அங்கத்தவர்களினூடாக தோழர் நேருவின் நிலை குறித்து ஒரு கடிதம் அனுப்பியும் அக்கடிதத்திற்கு இன்று வரையும் எவ்விதமான பதிலையும் தமிழீழ விடுதலை இயக்கம் அனுப்பி வைக்கவில்லை.

ஆனால் தோழர் நேரு, தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் (TELO) அழைத்துச் செல்லப்பட்டு, தன்னுடைய புதைகுழியை தானே வெட்டும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். தமிழீழ விடுதலை இயக்கத்தினர், அதே புதைகுழியில் அவரைச் சுட்டுக் கொலை செய்து புதைத்தனர். தோழர் நேருவோடு சேர்த்து, ஜனநாயகம், நீதி (இப்படி ஏதாவது அவர்களிடம் மிஞ்சியிருக்குமானால்) அனைத்தையும் புதைத்தார்கள்.

"வரலாற்றுத்தாய் புரட்சிப்பசியால் வாடிக்கொண்டிருக்கிறாள்" என்பதற்காக 'இரவல் படை'யில் புரட்சி செய்யப்புறப்பட்ட இந்த 'விடுதலை வீரர்'களின் நடவடிக்கைகள் தங்கண்ணுவின் ஆத்மாவை நிச்சயம் புண்படுத்தவே செய்யும்.

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) ஆரம்பகாலம் தொட்டே இத்தகைய கொலைகளையும் அராஜகத்தையும் வன்மையாக எதிர்த்து வந்துள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் கருத்து வேறுபாடு கொண்டவர்களை சரீரரீதியில் அழிப்பதன் மூலம் பிரச்சனைகளைத் தீர்த்து விடலாம் என TELO நம்புகிறதா?

செயலதிபர்:- இல்லை ஒரு விடுதலை இயக்கத்தை கட்டி வளர்த்துக் கொண்டு போகும் போது இடையிடையே கருத்து வேறுபாடுகளும; கன்னைப் போக்குகளும் தோன்றி மறைவதும் இயற்கையே. இதை அனைத்து இயக்க அங்கத்தவர்களின் பொது முயற்சியாலும் கருத்துச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமுள்ள தொடர்ந்த கலந்துரையாடலாலும் அகவினமாக்கி விடலாம். கருத்து முரண்பாடுகள் இயக்க வளர்ச்சியின் பிரதிபலிப்பே. சமுதாயம் தூங்கிக் கொண்டிருக்கும் போது விடுதலைச்சுமையை தாமே ஏற்பதாக விடுதலை இயக்கத்தனுள் சேர்ந்து பலகாலம் இசைந்து இயங்கிய சகதோழர்கள் சீரற்ற அரசியல் நெருக்கடிகளின் தாக்கங்களினால் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்தார்கள் என்பதற்காக அவர்களை சரீரரீதியில் அழிப்பது என்பது அரசியல் வறுமையாகும்.

(ஜெர்மனியில் இருந்து வெளியாகும் 'எண்ணம்' என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கு TELO செயலதிபர் திரு சிறி. சபாரத்தினம் வழங்கிய பேட்டியிலிருந்து)

இந்த வசனங்கள் சந்தேகமில்லாமல், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினம் அவர்களது மணிவாக்கே! தோழர்நேரு குரூரமாகப் படுகொலை செய்யப்பட்ட பின்பு இந்த மணிவாக்குகள் இவர்கள் 'புரட்சி'யைப் போலவே அர்த்தமிழந்து போய் விட்டன.

கருத்து வேறுபாடுகள் உள்ளன என்பதற்காகவும் அமைப்பில் அதிருப்தியுற்று விலகுவது என்பதற்காகவும் படுகொலை செய்வது என்பது கையாலாகாத்தனம்; விடுதலைப் போராட்டமல்ல.

தமிழீழ மக்களே!

சிறிலங்கா அரசின் இனவெறி ஒடுக்கு முறைக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு அவர்களின் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காகவும் நடத்தவேண்டிய புரட்சிகர மக்கள் யுத்தப்பாதையில் நம்பிக்கை வைத்ததுவும், அதற்காக உறுதியுடன் போராட முன்வந்ததும் தான் தோழர் நேரு செய்த குற்றமாகும்! தமிழீழத்தின் ஒரே முற்போக்கு அணி என தம்மை கூறிக்கொள்ளும் இந்த ரெலோஸ்டுகளின் படுபிற்போக்குத்தனமான வெறிச்செயலான இந்த நேரு படுகொலைக்குப் பின்னால் அதை நியாயப்படுத்த பல காரணங்கள் இட்டுக் கட்டப்படுகின்றன. பொலிகண்டியில் நடைபெற்ற கூட்டத்தில், இயக்கத்திலிருந்து விலகுவதை தீவிரமாக எதிர்த்தும், சகல ஜனநாயக வழிகளிலும் உட்கட்சிப் போராட்டத்தை நடாத்த வேண்டும் என்று உறுதியாக நின்றும் 'வரலாற்று சக்கரங்கள் பின்னோக்கி சுழல்வதில்லை' என்ற பிரசுரத்தை விநியோகிப்பதில் கவனமெடுத்தும் தான் சார்ந்திருந்த 'ரெலோ' இயக்கத்துள் முடிந்தளவு விசுவாசமாக நடந்த தோழர் நேரு மீது இன்று 'துரோகி'ப்பட்டம் சூட்டப்பட்டுள்ளது;

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியினருக்கு (NLFT) பயிற்சி வழங்கினரென்று மனமறிந்து பொய் சொல்லி பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள புரட்சிகர' ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோ (EPRLF) அல்லது ஈழப் புரட்சி அமைப்போ (EROS) இதுபற்றி மௌனம் சாதித்து வருகின்றன. இத்தகைய கொலைகளை கண்டிக்க திராணியற்று பேச்சுக்கு 'கூட்டு' அமைத்துவைத்திருக்கும் புரட்சி' இயக்கங்களின் நடவடிக்கையையிட்டு நாம் வேதனையடைகிறோம். இயக்க முரண்பாடுகளுக்காக ஆயுதமேந்துவது மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும் என்று 'பகட்டாக' அறிக்கை விடும் இந்த கூட்டு இந்த 'துரோக'த்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறது?

எமக்கு பயிற்சி தந்ததாக கூறப்படுகின்ற அபாண்டமான பொய்யுரைகளுக்கு எதிர்காலம் நிச்சயம் பதில் சொல்லும். ஆனால் இந்த பயிற்சி எமக்கு வழங்கப்பட்டதென்பதே, தோழர் நேருவை- இறுதிவரை 'சிறி' அண்ணாவிடம் தனிப்பட்ட மதிப்பும் அன்பும் காட்டிய நேருவை- படுகொலை செய்ய போதுமான தென்று உரத்துச் சொல்லும் தார்மீக பலம் இவர்களுக்கு இருக்கிறதா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறோம்.

''அரசியலை வேறு எவரினதோ தீர்மானத்திற்கு விட்டு விட்டு நல்ல சிப்பாய்களாக மட்டுமே பணிபுரிய விழையும்'' தமிழீழ விடுதலை இயக்கத்தினரது (TELO) விடுதலைப் போராட்ட வழியில் விளையும் அனர்த்தங்களுக்கு இவர்கள் மக்கள் முன் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இத்தகைய படுகொலைகளை உரிமை கோருவது என்ற மூன்றாம்தர நாகரீகம்கூடக் கிடையாத தமிழீழ விடுதலை இயக்கத்தினருக்கு நாம் சொல்லக் கூடியது இதுதான்:

தோழர் நேருவையும், வேறுபலரையும் கூட நீங்கள் குழிதோண்டிப் புதைக்கலாம்; ஆனால் உண்மையையும் நீதியையும் அல்ல!

தமிழீழம்
19-2-1985

அரசியல், பிரச்சாரப் பிரிவு; தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (N. L. F. T.)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்